1967 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பூச்சி மருந்து கிடைப்பதிலே எந்தவிதமான தகராறும் இல்லை. தேவையான அளவுக்குப் பூச்சி மருந்து வருகிறது. (திரு. கே. வினயகம்: நான் யூரியாவைப் பற்றிச் சொன்னேன்.) யூரியா என்பது உரம். உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் வித்தியாசம் தெரியாமல் . . .

THIRU K. VINAYAKAM : He is making a mistake. He is wrongly quoting me.

THE HON. THIRU A. GOVINDASAMY : I am not wrongly quoting him.

THIRU K. VINAYAKAM : He gives to the House the impression that I do not know the difference between pesticide and fertiliser.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வினயகம் அவர்கள், 'தன்னிலை விளக்கம்' கூற விரும்பினுல், பிறகு கூறிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் கேள்வி கேட்கும்போது சொன்னது பூச்சி மருந்தைப் பற்றி. அவர்களுக்கு விவரம் தெரியாது என்ற அந்த அளவுக்கு நான் சொல்லமாட்டேன். அவர்களைப் பற்றி அவ்வளவு குறைவாகச் சொல்லமாட்டேன். பூச்சி மருந்தைப் பற்றியவரை எந்தவிதமான குறைபாடும் கிடையாது. தேவையான அளவுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் கிடைக்கவில்லையோ, அங்கிருந்து உடனடியாக அரசாங்கத்திற்கு எழுதினுல் நிச்சயமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். யூரியா கிடைக்கவில்லை என்ற குறைபாடு ஓரளவு இருந்தாலும் கூட, உயர் ரக நெல்லை விளைவிப்பவர்களுக்கெல்லாம் தேவையான அளவுக்கு கார்டு மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் எந்த விதமான குறைபாடும் கிடையாது.

புது போலீஸ் நிலையங்கள்

** 430 வினு—திரு. ஈ. எம். நடராசன் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

கோவை மாவட்டம், பவானி தாலூகாவில் அதிகமான அளவில் நடை பெறும் கிரிமினல் குற்றங்களைக் குறைக்கும் வகையில் அங்கு போலீஸ் நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இல்லை.